028

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2010

**ESP 1263–** கலைத்திட்டமும் கற்றல் மதிப்பீடும்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 03.07.2010 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். ஒவ்வொரு விடையும் வெவ்வேறு புத்தகத்தில் எழுதப்படல் வேண்டும்.

01. (i) ஒன்றில் இலங்கையின் தற்போதய ஆரம்ப அல்லது இடைநிலை பாடசாலை கலைத்திட்டத்தினை தெரிவுசெய்து அதனைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(ii) நீங்கள் குறிப்பிட்ட கலைத்திட்டத்தினை அபிவிருத்தி செய்கையில் செல்வாக்கு செலுத்திய கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரி ஒன்றினை பெயரிட்டு இக் கலைத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களை பொருத்தமான உதாரணங்கள் தந்து விபரிக்குக. (15 புள்ளிகள்)

(iii) இவ் அம்சங்கள் நீங்கள் தெரிவுசெய்த கலைத்திட்டத்தில் எவ்வாறு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

02. (i) கலைத்திட்டம் ஒழுங்கமைப்பு என்றால் யாது கருதுகின்றீர்கள் என்பதை விளக்கி, ஒரு கலைத்திட்டத்தினை ஒழுங்கமைக்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் மூன்று(03) பரப்புகளை குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(ii) கலைத்திட்டத்தினை ஒழுங்கமைக்கையில் இப் பரப்புகளை ஒன்றில் தீர்ப்பதற்கு அல்லது பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு பின்பற்றக்கூடிய கோட்பாடுகள் யாவை? (10 புள்ளிகள்)

(iii) உங்களுக்கு பரீச்சியமான பாடசாலைக் கலைத்திட்டத்தினைப் பெயரிட்டு இக் கலைத்திட்டத்தின் ஒழுங்கமைப்பிலுள்ள வலிமைகளையும் பலவீனங்களையும் குறிப்பிடுக. அதன் வலிமைகள் மற்றும் பலவீனங்களுக்கான காரணங்களைத் தருக. (15 புள்ளிகள்)

03. (i) "கலைத்திட்டத்தின் மாற்றங்களை முகாமை செய்தல்" எனும் எண்ணக்கருவினை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) கலைத்திட்ட புத்தாக்கத்தில் மாற்றுமுகவர் ஒருவரின் வகிபங்கினையும் கடமைகளையும் இனங்காண்க. (06 புள்ளிகள்)

(iii) மாற்றத்திற்குள்ளான கலைத்திட்டத்தினை அமுல்படுத்துகையில் மாற்று முகவர் ஒருவர் என்ற வகையில் ஆசிரியர் ஒருவர் எதிர்நோக்கும் தடைகளை ஆராய்க. (13 புள்ளிகள்)

(iv) இத்தடைகளை நீக்கிக்கொள்வதற்கு எடுக்கப்படக்கூடிய நடைமுறைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

04. (i) ஒரு சோதனையின் "நடைமுறைச் சாத்தியம்" என்பதன் பொருள் யாது? (05 புள்ளிகள்)

(ii) ஒரு சோதனையின் குறைவான 'முகத்தகுதி' மாணவனது அடைவை எவ்வாறு பாதிக்கிறது என்பதை உதாரணம் மூலம் விளக்குக. (13 புள்ளிகள்)

(ii) வகுப்பறையில் கற்றல் - கற்பித்தலை விருத்தி செய்வதற்காக சோதனைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக. (15 புள்ளிகள்)

05. (i) கலைத்திட்ட மதிப்பீடு என்றால் என்பதை விளக்கி. ஒரு கலைத்திட்டம் மதிப்பீடு செய்வதன் தேவைபற்றி குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(ii) கலைத்திட்ட மதிப்பீட்டின் முக்கியமான அம்சங்கள் யாது? (08 புள்ளிகள்)

(iii) உங்களுக்கு தெரிந்த யாதாயினும் கலைததிட்ட மதிப்பீட்டு மாதிரியைக் குறிப்பிட்டு, இம் மாதிரியினுள் பின்பற்றப்படும் செய்னமுறை/செய்முறை விபரிக்க.

(iv) எமது நாட்டிலுள்ள யாதாயினும் ஒரு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை இனங்கண்டு இதனை மதிப்பீடு செய்வதற்கு இம்மாதிரியின் பொருத்தப்பாடினை பரீட்சிக்க.

06. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு(03) சிறு குறிப்புகள் எழுதுக.

(i) இடையிட்ட, இறுதி, ஏற்பாடு மதிப்பீடு.
(ii) மாணவர் அடைவை கணிப்பீடு செய்தல்
(iii) ஆசிரியர் ஆற்றுகை தரக்கணிப்பீடு.
(iv) மாணவர் சோதனை முடிவுகளைப் பதிவு செய்தலும் பகுப்பாய்வு செய்தலும்
(v) ஆசிரிய பயிற்றுநரின் மேற்பார்வை வகிபங்கு.

(03 × 11 = 33 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)